

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 8 | 08.03.2025 | மதுரை தெற்கு | திருப்பரங்குன்றம் | பனையூர் பேருந்து நிலையம் | இந்திரகுமார் தேரடி, தெ.வர்ஷினி |
| 9 | 08.03.2025 | திருநெல்வேலி கிழக்கு | இராதாபுரம் | செட்டிகுளம் பேருந்து நிறுத்தம் அருகில் | மதுரை பாலா, சகாய பெபிளா |
| 10 | 08.03.2025 | சேலம் மத்திய | சேலம் வடக்கு | கோரிமேடு, அஸ்தம்பட்டி | வழக்கறிஞர் ஐ.பரந்தாமன் எம்.எல்.ஏ., செ.யோக ஸ்ரீ |
| 11 | 08.03.2025 | விருதுநகர் வடக்கு | சிவகாசி | ரிசர்வ் லைன், ஆனையூர் பஞ்சாயத்து, சிவகாசி | முனைவர் **இரா.தி.சபாபதி மோகன்,** பா.முனீஸ்வரி |
| 12 | 09.03.2025 | தூத்துக்குடி வடக்கு | தூத்துக்குடி | சிதம்பரம் நகர் பேருந்து நிலையம், பாளை சாலை | **பொன்.முத்துராமலிங்கம்,** சஞ்சய் |
| 13 | 09.03.2025 | சேலம் மத்திய | சேலம் தெற்கு | கொண்டலாம்பட்டி ரவுண்டானா | வழக்கறிஞர் சரவணன் அண்ணாதுரை, சூரியபிரகாஷ் |
| 14 | 09.03.2025 | விழுப்புரம் தெற்கு | திருக்கோவிலூர் | திருவெண்ணைநல்லூர் | மாண்புமிகு **கோவி.செழியன்,** ச.கீர்த்தனா |
| 15 | 10.03.2025 | சேலம் மத்திய | சேலம் மேற்கு | கோட்டக் கவுண்டம்பட்டி, ஓமலூர் | வழக்கறிஞர் சிவ.ஜெயராஜ், வெ.சரண்யா |
| 16 | 10.03.2025 | விழுப்புரம் மத்திய | விழுப்புரம் | கோலியனூர் | டான் அசோக், த.இன்பக்குமாரன் |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 04–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி சார்பில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

பெங்களூரு, மார்ச் 8 - கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி சார்பில் முதலமைச்சர், தி.மு.க. தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் 72-வது பிறந்தநாள் விழா பெங்களூரில் விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

மார்ச் 23-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பெங்களூர் அலசூர் ஏரிக்கரை அருகே உள்ள பெங்களூர் தமிழ் சங்க அரங்கத்தில் இந்த விழா நடைபெறுகிறது.

கர்நாடக மாநில தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் இரா. அன்பு தமிழ் தாய் வாழ்த்து பாடி வரவேற்புரை ஆற்றுகிறார். கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி, தலைவர் முருகு தர்மலிங்கம் தலைமை தாங்குகிறார். பேராசிரியர் வணங்காமுடி, கழக முன்னோடி வி.எஸ். மணி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் இராஜசேகரன், முருகானந்தம், விகாஷ் ஆ.கரிகாலன், பிரபு திருமதி சற்குணா இளமதி, காயத்திரி பிரபு ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

கர்நாடக மாநில தி.மு.க. அமைப்பாளர் ந. ராமசாமி முன்னிலை வகிக்கிறார். மாநில நிர்வாகிகள், இலக்கிய அணி நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், தொ.மு.ச. நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் பொறுப்புக்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கலைஞரின் உடன்பிறப்புகள், கழக தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.

மருத்துவர். ஜெய.ராஜமூர்த்தி (இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை) கவிச்சுடர் கவிதைப்பித்தன், அரிமா டாக்டர் நா. சந்திரபாபு (தலைமை இலக்கிய அணி, பொருளாளர்) ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர். திருமதி. தங்கவயல், ஆ.கரிகால வளவன் விழா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குகிறார். முருகமணி செல்வம் நன்றி உரை ஆற்றுகிறார்.

விழாவில் கருத்தரங்கம் நடைபெறுகிறது. முத்துமணி நன்னன் தலைமை தாங்குகிறார். அண்ணா வழியில் அயராதுழைப்போம் என்ற தலைப்பில் ந.இராமசாமி அமைப்பாளர், கர்நாடக மாநில தி.மு.க. உரையாற்றுகிறார். ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம் என்ற தலைப்பில் தங்கவயல் ஸ்ரீதர் கர்நாடக மாநில தி.மு.க. உரையாற்றுகிறார்.

இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம் என்ற தலைப்பில் தங்கவயல் கரிகாலன் உரையாற்றுகிறார். மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்ற தலைப்பில் கிரி துணை அமைப்பாளர், கலை இலக்கிய பேரவை உரையாற்றுகிறார். வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம் என்ற தலைப்பில் தங்கவயல். எ.வி.மதியழகன் உரையாற்றுகிறார்.

நாட்டியாஞ்சலி நிருத்தியாலயா நாட்டியக்குழுவினரின் திராவிடம் வளர்த்த திராவிட இயக்க பாடல்கள் அமைப்பு : திருமதி. சுப்புலக்குமி குழுவினர்.

இந்த விழாவிற்கான ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்பாளராக கர்நாடக மாநில தி.மு.க. கழக இலக்கிய அணி செயலாளர் போர் முரசு கதிரவன் மேற்கொண்டு வருகிறார்.

'வாட்ஸ் அப்'பில் வலம் வருகிறது!






கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வடசேரி, கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டு வரும் கடைகளின் அருகில் காலியாக உள்ள இடத்தில் ரூ.48 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக 8 கடைகள் அமைக்க அடிக்கல் நாட்டும் பணி மற்றும் வடசேரி ஆம்னி பேருந்து நிலைய வளாகத்தில் ரூ.23 லட்சம் மதிப்பீட்டில் பயணிகள் காத்திருப்பு அறை, தாய்மார்கள் பாலூட்டும் அறை, பொருட்கள் பாதுகாப்பு அறை, நடைபாதை மற்றும் உயர் மாஸ்ட் லைட் போன்றவற்றை அமைக்க அடிக்கல் நாட்டும் பணி ஆகிய பணிகளை மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார். நிகழ்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, உதவி செயற் பொறியாளர் ரகுராமன், மண்டலத் தலைவர் இ.ஜவகர், மாமன்ற உறுப்பினர் நெ.கலாராணி, இளநிலை பொறியாளர் பாஸ்கர், நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.சதாசிவன், மாநகர துணை செயலாளர் பி.வேல்முருகன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழா கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் வடக்கு ஒன்றியம் எடையூர் ஊராட்சியில் மாவட்டப் பிரதிநிதி பொன். சிவக்குமார் நிகழ்ச்சி ஏற்பாட்டில், விருத்தாசலம் வடக்கு ஒன்றியக் கழக செயலாளர் கனக.கோவிந்தசாமி தலைமையில், கழக மாநில இலக்கிய அணி துணை செயலாளர் வி.டி.கலைச்செல்வன் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார் கலந்து கொண்டு கழகக் கொடி ஏற்றி இனிப்பு வழங்கி அரசு உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு பேனா, பென்சில், நோட்டு மற்றும் தேர்வு எழுதும் அட்டை போன்றவற்றை வழங்கினார். நிகழ்ச்சியில் செல்வகுமார், மூக்கன், பாசில், ஆசிரியர்கள் லாவண்யா, கோவிந்தசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.